மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 8, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

8—

மகப்பேறு மருத்துவமனை

***9972—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

துறைமுகம் தொகுதி, 57–வது வட்டம், யானைகவுனி பாலச் சாலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் மகப்பேறு மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

யானைகவுனி பாலச் சாலை பகுதியில் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து மகப்பேறு தாய்மார்களின் தேவையைக் கருத்திற்கொண்டு, வருங்காலத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். தன் வாழ்நாளுக்குப் பிறகு, தான் வாழ்ந்த வீட்டையே இந்த நாட்டிற்கு அர்ப்பணித்திருக்கின்ற தலைவர், தலைவர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன் உடற்கூட்டையே இந்த நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்திருக்கின்ற தலைவர், எங்கள் செயல் தலைவர் அன்பு தளபதி அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மருத்துவத்திற்கு அவர்கள் தந்திருக்கின்ற ஒரு சிறப்பு அடிப்படையில், அன்பிற்கினிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று*

2018 ஜனவரி 9]

கூறியிருக்கின்றார். எழும்பூர் மற்றும் திருவல்லிக்கேணி பகுதிகளில் செயல்படுகின்ற மருத்துவமனைகளில் ஒரு நாளைக்கு 60–லிருந்து 70 பேர்களுக்குப் பிரசவம் பார்க்கப்படுகின்றது. அந்த இரண்டு மருத்துவமனைகளுக்கு அதிகமான கர்ப்பிணித் தாய்மார்கள் வருவதால், பெரிய அளவில் இட நெருக்கடி ஏற்படுகின்றது. ஆகவே, அதைக் கருத்தில்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்னையிலே இருக்கின்ற 22 சட்டமன்றத் தொகுதிகளிலும், அனைத்து வசதிகளுடன்கூடிய மகப்பேறு மருத்துவமனையை ஏற்படுத்தித்தர ஆவன செய்யவேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இரண்டு மருத்துவமனைகளைக் குறிப்பிட்டார். சென்னையைப் பொறுத்தளவில், சென்னை எழும்பூரில் உள்ள மகப்பேறு மருத்துவமனை, திருவல்லிக்கேணியில் உள்ள* K.G.H. *மகப்பேறு மருத்துவமனை, வடசென்னை பகுதியில் இருக்கக்கூடிய* R.S.R.M. *மருத்துவமனை, கீழ்ப்பாக்கத்தில் உள்ள அரசு மகப்பேறு மருத்துவமனை ஆகிய நான்கு மகப்பேறு மருத்துவமனைகளிலும் ஒரு நாளைக்கு 100 பிரசவங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.* I.O.G. *மற்றும்* K.G.H. *மகப்பேறு மருத்துவமனைகளைப் பொறுத்தவரை, மொத்தம் 1,075 படுக்கைகள் கொண்ட* Centre of Excellence Hospital; Bed occupancy rate *மட்டும்* 91%; K.G.H. *மருத்துவமனையைப் பொறுத்தவரையில், அது 62 சதவிகிதம் மட்டும்தான் இருக்கின்றது. வருங்காலத்தில் இன்னும் தேவைகள் அதிகரிப்பின், நிச்சயம் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற பகுதியிலே* 24x7 *மருத்துவமனைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.*

ஏற்கெனவே தமிழ்நாட்டில் 126 CEmONC *மையங்கள் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன. மகப்பேறு இறப்பு விகிதம் இந்திய அளவில் 167 என்று இருக்கின்ற நிலையிலே, நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் 64 சதவிகிதம் என்ற உயர்வான நிலையை நாம் அடைந்திருக்கின்றோம். (மேசையைத்*

தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற பகுதிகளிலும் 24x7 மகப்பேறு மருத்துவமனைகளை அமைக்க உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, சென்னை பெருநகர மாநகராட்சியோடு இணைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எல்லா கருவறைக்குள்ளும் தெய்வம் இருக்கும்' என்பார்கள். ஆனால், 'தெய்வத்துக்குள் கருவறை இருக்கும் என்றால், அவள்தான் தாய்' என்று சொன்னான் ஒரு கவிஞன். அந்தவகையிலே, தாய்–சேய் நலனிலே அக்கறை கொண்ட அரசாக இந்த அரசு மாறுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக I.M.R. என்ற ஓர் ஆய்வு அறிக்கையில் 1,000–க்கு 17 குழந்தைகள் இறப்பதாக ஒரு தகவலைத் தந்திருக்கின்றார்கள். கிட்டத்தட்ட பார்த்தால் அது 2 சதவிகிதம். தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் குழந்தையின்மைக்காக. . . (குறுக்கீடுகள்) ஆய்வு அறிக்கையில் 1,000–க்கு 17 குழந்தைகள் என்றால், கிட்டத்தட்ட 2 சதவிகிதத்தை நெருங்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள், பேசாமல் இருங்கள். அமைதியாக இருங்கள். (குறுக்கீடு) திரு. பி.கே. சேகர்பாபு, கேள்வியைக் கேளுங்கள்.*

திரு.பி.கே.சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தையின்மைக்காக தமிழகத்தில் மருத்துவமனையை நாடுகின்ற தாய்மார்கள் அதிக அளவிலே இன்றைக்கு இருக்கின்றார்கள். அனைத்து மருத்துவமனைகளிலும் சிசு தீவிர சிகிச்சை மருத்துவப் பிரிவை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் கேள்வியில் குறிப்பிட்டுள்ள 57–வது வட்டத்தில், கூவம் ஆற்றின் கரையோரங்களிலும், சாலையோரங்களிலும் ஒரு தலைமுறையைத் தாண்டி மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக, இந்த அரசு மருத்துவமனைகளைப் பொறுத்தளவில், ஏழையெளிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற மக்கள்தான் அரசு மருத்துவமனையை நாடுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. ஆகவே, ஏழையெளிய மக்களைக் காப்பாற்றுவதற்காக*

2018 ஜனவரி 9]

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்து வரவிருக்கின்ற நிதிநிலை அறிக்கையிலே நான் குறிப்பிட்ட 57–வது வட்டத்திலே அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு தாய்–சேய் மருத்துவமனையை ஏற்படுத்தித்தர முன்வர வேண்டுமென்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அளவிலேயே தமிழ்நாட்டில் மட்டும்தான் 99.82 சதவிகிதம்* institutional delivery. *பொதுவாக அரசு மருத்துவமனைகளில் 99.82 சதவிகிதம் குழந்தைகள் பிறக்கின்றன. எந்த மாநிலத்திலும் இந்த அளவிற்கு மருத்துவமனைகளில் குழந்தைகள் பிறப்பு என்ற நிலைமை இல்லை.* (மேசையைத் தட்டும் ஒலி) *அந்தக் காலத்தில் மருத்துவச்சியிடம் சென்று பிரசவம் பார்த்த நிலையையெல்லாம் மாற்றி, தற்போது மகப்பேறு சேவையிலே மிக உயர்வான நிலையை அரசு மருத்துவமனைகள் அடைந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குழந்தைகள் இறப்பு விகிதம் 17 என்று குறிப்பிட்டீர்கள். கடந்த வருடம் 1,000–க்கு 19 என்ற நிலை. இந்த ஓராண்டில் மட்டும் 10 சதவிகிதம் குறைத்து, 1,000–க்கு 17 என்று மாநில அரசு இன்றைக்கு மிகப் பெரிய சாதனையைப் படைத்துள்ளது. இதை மத்திய அரசும், உலக சுகாதார நிறுவனமும் பாராட்டியிருக்கிறது. இந்திய அளவில் இந்த சதவிகிதம் இரண்டு மடங்காக இருக்கிறது. தமிழகத்தில் 17; இந்திய அளவில் 38 சதவிகிதம் என்ற அளவில் இருந்து கொண்டிருக்கின்றது. இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான் இன்றைக்கு டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம்,* neo–natal Ambulance, 24x7 CEmONC Centre, *சிசு பராமரிப்பு மையங்கள் எனப் பல உயர்வான சேவைகளை வழங்கி, இந்திய அளவிலே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றிருக்கிறது. ஏற்கெனவே சென்னையில் பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து, 19 இடங்களில்* 24x7 maternity centres *இயங்கிக் கொண்டிருக்கின்றன. தாங்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே, இருக்கக்கூடிய தாய்மார்களின் தேவையைக் கருதி, நிச்சயமாக கூடுதலாக அதனை அமைக்க கருத்தில்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[*2018 ஜனவரி 9*

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.பி. நந்தகுமார் அவர்கள்.*

திரு. ஏ.பி. நந்தகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய அணைக்கட்டு தொகுதியில் இருந்த 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையைத் தாலுகா மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று கோரிக்கை வைத்தேன். அதன்படி தாலுகா மருத்துவமனையாக அதை உயர்த்தித் தந்தார்கள். தாலுகா மருத்துவமனையாக அதை உயர்த்துவதற்கு முன்பாக அங்கு 5 மருத்துவர்கள் பணியாற்றினார்கள். தரம் உயர்த்தியதற்குப் பின்னர், தற்போது அங்கு 60 படுக்கைகள் இருக்கின்றன. ஆனால், தற்போது அங்கே 2 மருத்துவர்கள் மட்டும்தான் பணி புரிந்துகொண்டிருக்கின்றார்கள். இந்த அரசானது, தரம் உயர்த்தப்பட்ட அந்த மருத்துவமனையில் ஏழை எளிய மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் 10 மருத்துவர்களை உடனடியாகப் பணியில் அமர்த்திட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தரம் உயர்த்தப்பட்டதற்குப் பின்னர் இதுபோன்ற மருத்துவமனைகளில் பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டு மருத்துவப் பணியாளர்கள் தேர்வு வாரியத்தின் மூலமாகத் தேர்வு செய்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேரடியாக ஆணைகள் வழங்கி,* 556 Speciality Doctors*–களை நாங்கள் நியமித்திருக்கின்றோம். அதைத் தொடர்ந்து பொது சுகாதாரத் துறையில்* zero per cent vacancy *என்ற நிலையை எட்டி இருக்கின்றோம். தமிழ்நாட்டில் இருக்கின்ற அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மருத்துவர் காலிப் பணியிடங்கள் இல்லை என்ற நிலையை முதன்முதலாக 2017–2018–ல் நாங்கள் உருவாக்கி இருக்கின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக மருத்துவர்களைப் பொறுத்தவரையில், சென்னை போன்ற பெரிய நகரங்களில் பணிபுரிவதற்கு மிகுந்த ஆர்வமாக இருக்கின்றார்கள். இருந்தாலும்கூட, அவர்களை கவுன்சிலிங் மூலமாக, தாங்கள்*

2018 ஜனவரி 9]

குறிப்பிடுகின்ற Taluk/Non–taluk *மருத்துவமனைகளிலும் நியமனம் செய்துகொண்டிருக்கின்றோம். எனவே, நீங்கள் குறிப்பிடுகின்ற மருத்துவமனையிலும் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 9, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

9—

மலர் விற்பனைக் கூடம்

***11588—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் மலர் விற்பனைக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, செங்கம் நகரில் மலர் விற்பனைக் கூடம் அமைக்கும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மலர்கள் உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் நிரம்ப இருக்கின்ற தொகுதி செங்கம் தொகுதி. அருகில் இருக்கின்ற தண்டராம்பட்டு, கலசப்பாக்கம், புதுப்பாளையம் மற்றும் பிற பகுதிகளில் பல இலட்சம் ஏக்கரில் மலர்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த மலர்கள் செங்கம் மற்றும்*